# ஆசிரியர் கைந்நூல்

வெளியீடு:

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

லீவு

# புகையிரத ஆணைச்சீட்டு

*தொகுப்பு :*

திரு. எஸ். கே. சதாசிவம்
*சிரேஸ்ட துணை நிதிச் செயலாளர்*
இ. த. ஆ. ச.
யா / சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்
காரைநகர்

# ஆசிரியர் கைந்நூல்

1. லீவு
2. புகையிரத ஆணைச்சீட்டு

முதற்பதிப்பு: **8-5-1990**

தொகுப்பு: எஸ். கே. சதாசிவம்
சிரேட்ட துணை நிதிச்செயலாளர் இ. த. ஆ. ச.

வெளியீடு: இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
29, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு: செட்டியார் அச்சகம்,
430, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா **10/-**

# Teachers Hand Book

1. Leave
2. Railway Warrant

*First Edition:* **8-5-90**

*Compiled by:* S. K. SATHASIVAM
Senior Assistant Finance Secretary C. T. T. U

*Published by:* Ceylon Tamil Teachers Union
29, Jummah Mosque Lane,
Jaffna.

*Printer* Chettiar Press,
430, K. K. S. Road,
Jaffna.

**10/-**

## அணிந்துரை

இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கம் வெளியிடும் ஆசிரியர் கைந்நூலுக்கு அணிந்துரை நல்குவதில் தொழிற்சங்கவாதி என்ற முறையில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இக் கைநூலைத் தொகுத்து வெளியிடும் திரு. எஸ். கே. சதாசிவம் அவர்கள் ஆசிரியத் தொழிலின் ஆரம்பகாலம் முதல் இ. த. ஆ. சங்கத்தின் உறுப்பினராவார்: 1982ம் ஆண்டு முதல் இ. த. ஆசிரியர் சங்கத்தின் சிரேஸ்ட துணைநிதிச் செயலாளராக சேவை ஆற்றுகின்றார். இக் குறுகிய காலத்தில் தனது பணிகளுடன் இ. த. ஆ. சங்கம் நடாத்தும் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்யும் எம் முயற்சியில் கலந்து உழைக்கும் அலுவலராவர். நமது கருத்தரங்குகளின் பலனாக ஏற்பட்ட கற்கை தூண்டுதலினால் இந்நூலை தொகுத்து வெளியிடுகின்றார். இந்நூல் ஆசிரிய சமுதாயத்தின் ஒரு நீண்ட கால தேவையைப் பூர்த்தி செய்யும் எனும் நம்பிக்கை எனக்குண்டு. ஆசிரியர்கள், அதிபர்கள் லீவு புகையிரத ஆணைச்சீட்டு போன்றவற்றில் கடைப்பிடிக்க வேண்டிய நிர்வாக முறைகளை வெகு துல்லியமாக எடுத்து விளக்குகின்றது. திரு. எஸ். கே. சதாசிவம் அவர்கள் இப்பணியை தொடர்ந்தும் ஆசிரிய சமுதாயத்திற்கு வழிகாட்டும் பல நூல்களை வெளியிட வேண்டும் என வாழ்த்துகின்றேன்;

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

29 ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## முன்னுரை

கடமையில் மேன்மை அடைய, திறம்பட கருமமாற்ற மனநிறைவுடன் கடமை செய்ய ஒவ்வொருவரும் தமக்குள்ள உரிமைகள் சலுகைகள் என்பன பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும். இந்நூல் இத்தேவையை நிறைவு செய்யும் என நம்புகின்றேன்.

இந்நூலை தொகுத்து வெளியிட தூண்டியும், அணிந்துரை வழங்கியும் உதவிய இ. த. ஆ. ச. பொது செயலாளர் திரு. த, மகாசிவம் அவர்களுக்கு எனது நன்றிகள். இந்நூலை தொகுத்தபின்னர் அவற்றை ஒப்பு நோக்கி முறைப்படி அமைய உதவிய வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஸ்ட உதவி செயலாளர் திரு. கா. சந்திரராசா அவர்களுக்கு எனது நன்றிகள்.

இந்நூலின் தட்டச்சு பிரதிகளை தயாரித்த செல்வி சோதிப் பெருமாளுக்கும் இந்நூலை அச்சிட்ட செட்டியார் அச்சக ஸ்தாபனத்தார்க்கும் எனது நன்றிகள்

"கணேசவாசம்"
இடைப்பிட்டி
காரைநகர்

எஸ். கே. சதாசிவம்

## லீவு

லீவு சலுகை ஆனால் உரிமை அல்ல. அது சேவையின் தேவை கருதி வழங்கப்படும். அதிகாரியினால் நீக்கப்படும் அல்லது நிற்பாட்டுப் படலாம்.

பாடசாலைகள் அமைந்துள்ள மாவட்ட கல்விப் பணிப்பாளர் லீவு வழங்கும் தன் அதிகாரத்தை பாடசாலை அதிபர்களுக்கு வழங்கியுள்ளார். அதிபர்களுக்கு லீவு வழங்கும் அதிகாரம் கல்விப் பணிப்பாளருக்கு உரியது. பாடசாலை வேலைகள் பாதிப்புறாத வகையில் லீவு வழங்கி பதில் ஒழுங்குகளை அதிபர் மேற் காள்ள வேண்டும்.

ஒரு உத்தியோகஸ்தர் லீவு இல்லாமல் தனது வேலைத் தளத்துக்கு செல்லாமல் இருக்க முடியாது.

ஒரு உத்தியோகஸ்தர் வேலை செய்யுமிடத்தில் இருந்து லீவில் செல்வதற்கு வாய் மூலம் அல்லது உத்தியோக பூர்வமற்ற முறையில் அனுமதி பெற்று இருப்பினும் லீவு வழங்கும் அதிகாரிக்கு லீவு விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். கடித உருவில் லீவுக்கு விண்ணப்பிக்கலாகாது.

லீவு பெறாமல் அல்லது தகுந்த காரணம் இன்றி வேலைக்கு வராதிருப்பின் தாபன கோவை விதி அத். 7 .5. பிரகாரம் தாமாகவே சேவையிலிருந்து நீங்கியவராக கருதி அவரது வருகையின்மையை சம் பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதிபர் அறிவித்தல் வேண்டும்.

### 1. அமைய லீவு – சமயோசித லீவு – Casual Leave

ஓர் ஆசிரியர் ஓர் ஆண்டில் 21 நாட்கள் அமைய லீவு எடுக்க முடியும். ஒரே தடவையில் 6 நாட்களுக்கு மட்டுமே தொடர்ச்சியாக அமைய லீவு வழங்கலாம். அமையலீவு இலங்கையிலேயே உபயோகிக் கப்படல் வேண்டும். அமைய லீவில் 7 நாட்கள் சுட்டிப்பான கார ணத்தை குறிப்பிடாது அவசிய தேவைகளுக்காகவும் பிரத்தியேக கார ணம் எனக் கூறியும் எடுக்கலாம். ஏனைய சந்தர்ப்பங்களில்:

1) விண்ணப்ப தாரியின் சுகவீனம். விவாகம்

2) குடும்ப உறுப்பினர்களின் சுகவீனம் அல்லது மரணம்

3) குற்றவியல் அல்லது அரச தரப்பு வழக்குகள் அல்லாத வழக்குக்களாக நீதி மன்றங்களுக்கு சமுகம் அளித்தல்

4) கல்வித்திணைக்களம் அல்லது பல்கலைக்கழகங்கள் நடத்தும் பரீட்சைக்குத் தோற்றுதல் போன்ற தகுந்த காரணங்களைக் குறிப்பிட்டு அமைய லீவுக்கு விண்ணப்பிக்கலாம்.

அமைய லீவு இயன்றளவு முன் கூட்டியே விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். படிவம் பொது – 125 அ– (125A) இரட்டைப் பிரதியில் லீவுக்கு விண்ணப்பிக்க வேண்டும். அமைய லீவு கணிக்கப்படும் போது சனி, ஞாயிற்றுக்கிழமைகளும் பொது விடுமுறை தினங்களும். பாடசாலை விடுமுறை தினங்களும் சேர்த்துக் கொள்ளப் பட மாட்டாது. வேலை நாட்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். ஓர் ஆண்டில் வழங்கப்படக்கூடிய அமைய லீவு அவ் ஆண்டிலேயே உபயோகிக்கப்படல் வேண்டும். குறித்த ஆண்டில் ஒருவரின் சுகவீன லீவு முடிந்து சம்பளமற்ற லீவு பெற வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில் அதுவரை எடுபடாது விடப்பட்ட அமைய லீவை எடுத்து சம்பளமற்ற லீவைத் தவிர்த்துக் கொள்ளலாம். சுகவீன, லீவு அமைய லீவு உபயோகிக்கபபடாதலீவு என்பன முழுவதும் குறிப்பிட ஆண்டில் எடுத்து முடிந்த பின்னரே சம்பளமற்ற லீவு கணிக்கப்படும்.

## 2. சுகவீன லீவு (Medical Leave)

ஆசிரியர்கள் வருடத்திற்கு 20 நாட்கள் சுகவீன லீவுக்கு உரித்துடையவர்கள். இரண்டு நாட்களுக்கு மேற்படாது இருப்பின் மருத்துவ சான்றிதழ் இன்றி சுகவீன லீவு பெற்றுக்கொள்ளலாம். இரண்டு நாட்களுக்கு மேற்படின் மருத்துவ சான்றிதழ் சமர்ப்பித்தே சுகவீன லீவு பெற்றுக் கொள்ள முடியும். 14 நாட்களுக்கு மட்டுமே மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் அல்லது ஆயுள்வேத சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவரின் மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கலாம். 14 நாட்களுக்கு மேற்படின் அரசாங்க வைத்திய அதிகாரியின் மருத்துவச் சான்றிதழ் சமர்பிக்கலாம். சுகவீனலீவு தொடர்பான விண்ணப்பங்கள் 125 அ இரட்டைப் பிரதிகளில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். லீவு தொடங்

ரும் தினத்தன்றே அதிபருக்கு அறிவித்தல் நலம். இது அதிபர் பதில் கடமை புரிவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுவதற்கு உதவியாக இருக்கும்.

மூன்று மாதங்கள் வரை தொடர்ந்து சுகவீன லீவில் நிற்பவர்கள் வைத்திய பரிசோதனைக்காக மருத்துவர்களைக் கொண்ட வைத்திய பரிசோதனைச் சபைக்கு அனுப்பப்படுவர். வைத்திய பரிசோதனை அறிக்கையின் சிபார்சின் பிரகாரம் ஒருவர் சேவையாற்ற தகுதியற்றவர் எனக்காணப்பட்டால் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்படுவர். சுகவீன லீவு கணிக்கப்படும் போது சனி, ஞாயிற்றுக்கிழமைகளும் பகிரங்க விடுமுறை தினங்களும் பாடசாலை விடுமுறை தினங்களும் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

வீட்டிலே வதியும் குடும்ப உறுப்பினர்கள் தொற்று நோய் ஒன்றினால் பிடிக்கப்பட்ட இருக்கும் காலத்தில் அதனை அத்தாட்சிப்படுத்தும் மருத்துவச் சான்றிதழை வைத்திய அதிகாரியிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பும் பட்சத்தில் சுகவீன லீவு பெற்றுக் கொள்ளலாம்.

3. மகப்பேற்று லீவு (Maternity Leave)

01-03-1989 திகதியில் வெளியிடப்பட்ட சுற்று நிருபம் பிரகாரம்.

1) ஆசிரியைகளுக்கு முதல் 2 பிரசவங்களுக்கும் 3 மாத சம்பளத்துடனான பிரசவ லீவு வழங்கப்படும்.

2) எஞ்சிய பிரசவங்களுக்கு 6 வார பிரசவ லீவு சம்பளத்துடன் வழங்கப்படும்.

3) 9 மாத சேவை உள்ள ஆசிரியர்கள் மாத்திரம் பிரசவ லீவிற்கு உரிமை உடையவர்கள்.

4) 9 மாத சேவைக்கு குறைந்தவர்கள் விகிதாசார பிரசவ லீவைப் பெற்றுக் கொள்ளலாம்.

குழந்தை பிறந்த தினத்தில் இருந்தோ அல்லது பிறந்த திகதிக்கு இரண்டு கிழமைகளுக்கு முன்பிருந்தோ மகப்பேற்று லீவை எடுக்கலாம்.

மகப்பேற்று லீவு கணக்கிடும் பொழுது பொது விடுமுறை தினங்கள் சனி, ஞாயிறு பாடசாலை விடுமுறை நாட்களும் அடங்கும். இது ஏனைய லீவுகளுக்கு பொருந்தாது.

மகப்பேற்று லீவு பெறுவதற்கு மருத்துவச் சான்றிதழ் அல்லது பிறப்புச்சாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். லீவு விண்ணப் பங்கள் அதிபருக்கு இரட்டைப் பிரதியில் சமர்ப்பித்தல் வேண்டும்.

1) கருச் சிதைவு ஏற்பட்டால் மகப்பேற்று லீவு வழங்கப்பட மாட்டாது.

2) சிசு இறந்த படி பிறந்தால் மகப்பேற்று லீவுக்கு உரித்து டையவர்.

அரச ஊழியர் திருமணமாகாமல் பிள்ளை [பெற்றால் மகப்பேற்று லீவுக்கு உரித்துடையவர் அல்லர்.

4. விடுமுறை லீவு - Vacation Leave

ஆசிரியர்களுக்கு ஏனைய அரச ஊழியர்களைப் போல விடுமுறை லீவு பாடசாலை நாட்களில் வழங்கப்படுவதில்லை. பாடசாலை விடு முறை நாட்கள் ஆசிரியர்களுக்கு லீவாகக் கணிக்கப்படும். எனினும் அவசிய தேவையின் பொருட்டு திணைக்களம் விடுமுறை காலத்தில் அழைத்தால் ஆசிரியர்கள் கடமைக்கு சமுகம் கொடுக்க வேண்டும். ஒரு ஆசிரியர் ஒரு நாள் மட்டுமே பாடசாலையில் கடமையாற்றினா லும், சகல லீவுகளும் முடிந்து அவர் சம்பளமற்ற லீவில் அமர்த்தப்பட்டு இருப்பினும் பாடசாலை தவணை விடுமுறை தினங்களுக்குரிய சம்பளத் தைப் பெறும் உரிமை உண்டு.

5) உபயோகிக்காத காலம் கடந்த லீவு - Un Used Medical Leave

தொடர்ந்த இரண்டு வருடங்களில் உபயோகிக்காத மருத்துவ (சுகவீன) லீவைப் பயன்படுத்திக் கொள்ள ஆசிரியருக்கு உரிமையுண்டு. 1.1.85 இல் இருந்து இவ்விதி நடை முறைக்கு வந்துள்ளது. எஞ்சியுள்ள அமைய லீவை இவ்வாறு எடுக்க முடியாது. இதனை வருடத்தில் ஒரு முறை மாத்திரம் எடுக்கலாம். அதாவது அடுத்தடுத்து வரும் இருவருடத்தில் எஞ்சியிருக்கும் சுகயீன லீவை சுகயீன கார ணத்திற்கு மாத்திரம் ஒரு வருடத்தில் பெற்றுக் கொள்ளலாம். அவ்வரு டத்தில் அவருக்கு உரித்தான லீவுகள் யாவும் முடிவடைத்த பின்னரே இந்த லீவு அனுமதிக்கப்படும், இதற்கான அங்கீகாரம் கல்விப் பணிப் பாளரினால் வழங்கப்படும்.

6. விசேட லீவு — Special Leave

தவிர்க்க முடியாத சூழ் நிலைகளை முன்னிட்டு குறிப்பிட்ட காலத் திற்கு அரசாங்கம் விசேட லீவை வழங்கும். அண்மைக் கால அசம்

பாவித சம்பவங்களுக்கும், சம்பவங்களின் போது விபத்துக்குள்ளாகி வைத்திய சிகிச்சை பெறும் ஆசிரியர்களுக்கும் விசேட மருத்துவக் குழுவின் சிபார்சின் பேரில் முழுச் சம்பளத்துடனான லீவு பெறும் உரிமை உண்டு. இது கடமை நேரத்தில் மட்டுமன்றி மற்றும் நேரங்களுக்கும் பொருந்தும்.

1) வெள்ளிக்கிழமைகளில் மாலை 12:15 இருந்து 2 மணித்தியாலயங்களுக்கு மேற்படாது முஸ்லீம் உத்தியோகத்தருக்கு சமயக் கடமைகளுக்கு திணைக்கள தலைவரின் விருப்பின் படி வழங்கலாம்.

2) விசேட லீவு ஊழியர் தேவைப்படும் இடத்து காரியாலய நேரத்திற்க்கு புறம்பாக வேலை செய்ய வேண்டும் எனும் நிபந்தனையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கல்வி பயில ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலயங்களுக்கு மேற்பட்டாது இருத்தல் வேண்டும். 9 30 மணிக்கு பிந்தாமலும் 3 15 முந்தாமலும்

அமைய வேண்டும். சம்பந்தப்பட்ட ஊழியரின் கடமை பாதிக்கப்படின் அவரது சலுகைகள் மீளப் பெறல் வேண்டும்.

4) தொழிற்சங்கம் சமூக நலன் பேணும் அமைப்பு அல்லது பொது ஊழியரின் அமைப்பு பதவி உயர்வு சம்பந்தமான பரீட்சை ஒன்றுக்காக வகுப்புக்களை நடத்துமாயின் 1 மணித்தியால வகுப்பில் கலந்து கொள்ளதிணைக்கள தலைவர் அனுமதிக்கலாம்.

5) ஒரு பொது ஊழியர் சம்பளத்துடன் தேவைப்படின் வாக்களிப்பதற்க்கு தொடர்ச்சியாக ஆகக் குறைந்தது. நேரங்கள் பின் வருமாறு ஒதுக்கலாம்.

| | |
|---|---|
| ஜனாதிபதித் தேர்தல் | — 4 மணி |
| பாராளுமன்ற ,, | — 4 மணி |
| சர்வஜன வாக்கெடுப்பு | — 4 மணி |
| மாவட்ட அபிவிருத்தி சபை | — 2 மணி |
| உள்ளூர் ஆட்சி அமைப்பு | — 2 மணி |

6) விஞ்ஞான அல்ல தொழில் சார்ந்த நிறுவனம் அல்லது சங்க அரசிடம் இருந்து வருடாந்த உதவி பெறுமிடத்து இலங்கையை

சர்வதேச மாநாட்டில் பிரதிநிதித்துவப்படுத்த அவ் ஊழியர் வெளிநாடு செல்ல அனுமதிக்கும் பட்சத்தில் அவ்ஊழியருக்கு சம்பளத்துடன் கூடிய லீவை செயலாளர் வழங்கலாம். லீவு மாநாடு நடக்கும் காலம் பிரயாணம் செய்ய ஆகக் குறைந்த நாட்களுக்கு லீவு சம்பளத்துடன் வழங்கலாம்.

7) விளையாட்டு அல்லது அது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுடன் ஒரு பொது ஊழியர் ஈடுபட்டு இருப்பின் அவருக்கு முழுச்சம்பள விசேட லீவு பின்வருவனவற்றுக்காக வழங்கலாம்.

1) எந்த ஒரு விளையாட்டிலும் விளையாட்டு வீரராக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்த

2) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஒரு தேசிய குழுவின் அலுவலராகக் கடமையாற்ற

3) சர்வதேசப் போட்டிக்கு முன் நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் கலந்து கொள்ள

4) விளையாட்டு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச கருத்தரங்கு அல்லது பயிற்றுவித்தல் சம்பந்தமான சர்வதேச கற்கை நெறி அல்லது மத்தியஸ்தர்.

8) ஒரு பொது ஊழியர் மேற் கண்ட லீவிற்கு பின்வரும் பிரிவில் ஒன்றில் அடங்கியிருப்பின் திணைக்கள தலைவரின் தீர்மானத்தின் பேரில் விசேட லீவு வழங்கலாம்.

1) சாதாரண பயிற்சிகளில் பங்கு பற்றும் ஒரு தேசிய விளையாட்டு வீரர். இது விளையாட்டு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இருத்தல் வேண்டும்.

2) இலங்கை அரசாங்க சேவை விளையாட்டு கழகத்தினால் ஒழுங்கு செயப்படும் உள்ளூர் போட்டிகளில் பங்கு பற்றின.

3) இவ்வாறான போட்டி ஒன்றில் மத்தியஸ்தராக கடமை ஆற்றின.

9) ஒரு தொழிற்சங்க உறுப்பினர் தொழிற்சங்கம் சம்பந்தமான விதிகளுக்கு அமைவாக.

தொழில் அமைச்சினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும். தொழிலாளர் கல்வி நெறிக்கான கற்கை நெறியில் கலந்து கொள்ள விசேட லீவு வழங்கலாம்.

10) குறிப்பிடப்பட்ட சில நோய்கள் பிடிக்கப்பட்டிருப்பின் கச நோய், தொழு நோய், புற்று நோய் ஆகிய நோய்களால் பிடிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு சம்பளத்துடனான விசேட லீவு வழங்கப்படும்.

கச நோய்:- 9 மாதம் வழங்கப்படும்.

ஒரு முறை 9 மாதம் லீவு எடுத்து நான்கு வருடங்களின் பின் மீண்டும் அந்நோய்க்கு உட்படுத்தப்பட்டால், மீண்டும் ஒரு முறை 9 மாதம் சம்பளத்துடனான லீவு வழங்கப்படும்.

வைத்திய அதிகாரிகள் கொண்ட குழுவின் சிபார்சில் மாத்திரம் இவ் லீவு வழங்கப்படும்.

ஒரு ஆசிரியர் தலது சேவைக் காலத்தில் இரு முறை மாத்திரம் இச்சலுகையை உபயோகிக்கலாம்.

தொழு நோய்:- 22 மாதங்கள் சம்பளத்துடனான லீவு

புற்று நோய்:- 6 மாதங்கள் சம்பளத்துடனான லீவு

11) கருத்தடை செய்யும் பொழுது பின்வருமாறு விசேட லீவு வழங்கலாம். 7 நாட்கள் பெண்கள். 3 நாட்கள் ஆண்கள். ஊழியர் கருத்தடை செய்து கொண்டார் என பதிவு செய்யப்பட்ட மருத்துவரிடம் இருந்து மருத்துவ சான்றிதழ்சமர்ப்பின்.

12) சேவா வனித அங்கத்தவராக இருப்பின் மாதம் 1 மணி வீதம் சேவா வனித கூட்டத்திற்கு கலந்து கொள்ள லீவு வழங்கலாம்.

## 7. அரைநாள் லீவு - Half - Day - Leave

பாடசாலை தொடங்கும் நேரத்தில் இருந்து அரை மணி நேரம் பிந்தி வரும் ஆசிரியர்கள் அன்றே அரை நாள் லீவில் அமர்த்தப்படுவர். 15 நிமிடங்களும் 30 நிமிடங்களுக்கும் இடையே பிந்தி வரும் ஒவ்வொரு மூன்று தடவைகளும் அரை நாள் லீவாக கணிக்கப்படும். தொடர்ச்சியாக மூன்று மணித்தியாலயங்கள் பணியாற்றிய பின் மீதிக்கு அரை நாள் லீவு வழங்கப்படலாம். இரு நேர அமர்வுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு

உணவு இடை வேளை நீங்கலாகத் தொடர்ச்சியாக மூன்று மணித்தியாலயங்கள் பணியாற்றி வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி காலையிலோ பிற்பகலிலோ அரை நாள் லீவு வழங்கலாம்.

8) குறுகிய லீவு — Short - Leave

ஒரு மாதத்தில் இரு முறை 1 மணித்தியாலத்திற்கு மேற்படாமல் வழங்கலாம்.

9) விபத்து லீவு — Accident Leave

ஒரு ஊழியர் கடமை நேரத்தின் போது விபத்துக்குள்ளாவதற்கு அவர் எவ்விதத்திலும் காரணமாக இல்லா திருப்பின் விபத்து லீவு வழங்கப்படலாம். கடமைக்கு போகும் பொழுது அல்லது வரும் பொழுது சம்பவிப்பின் ஏற்றுக் சொள்ளப்படும். மரணமடையின் 5 வருட சம்பளம் நஷ்ட ஈடாக வழங்கப்படும். விபத்து லீவுக்கான விண்ணப்பம் அரசாங்க வைத்திய அதிகாரியின் வைத்திய சான்றிதழுடன் சமர்ப்பிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட செயலாளர் 6 மாத முழுச் சம்பள 6 மாத அரைச் சம்பள லீவு வழங்கலாம். விபத்து வு[illegible] விண்ணப்பம் பொது 5 படிவத்தில் அனுப்புதல் வேண்டும்.

10. கடமை லீவு - Duty Leave

சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்களில் பங்கு பற்றுதல் கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்படும் பயிற்சிகள், கருத்தரங்குகள், மகாநாடுகள், கூட்டங்கள் உடற்பயிற்சி போட்டிகள் ஆகியவற்றில் பங்கு பற்றுதல் போன்றவைகளுக்குச் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு கடமை லீவு வழங்கப்படும். கல்விப் பணிப்பாளரே கடமை லீவை வழங்குவார். விண்ணப்பங்கள் இரட்டை பிரதிகளில் வரவுச் சான்றிதழ்களுடன் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பப் படல் வேண்டும்

குற்றவியல் வழக்குகள். அரசு தரப்பு வழக்குகள் என்பன தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க அழைப்பாணை விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும் நீதிமன்றங்களில் யூரி சேவைக்கு அழைக்கப்படும் ஆசிரியர்களுக்கும் கடமை லீவு வழங்குவதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் தொழிற் சங்க ஆண்டு பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஒரு நாள் கடமை லீவு வழங்கப்படும்.

ஒரு ஊழியர் கடமையாற்றும் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட கடமை சம்பந்தப்பட்ட சம்பந்தமான தொழிற்சங்க அங்கத்தவர் என்னும் அந்தஸ்த்தில் பங்கு பற்றும் கருத்தரங்குக்கு கடமை லீவு வழங்கலாம்.

பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் மேற்பார்வையாளர், நிரந்தர நோக்குநர், சாதாரண நோக்குநர்களாக நியமனம் பெறுவோர் பாடசாலை நாட்களில் பரீட்சைகள் நடைபெறும் பட்சத்தில் கடமை லீவுக்கு உரித்துடையவர். பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் வினாத்தாள்களை திருத்துவதற்கு செல்லும் இடத்தும் கடமை லீவு வழங்கப்படும்

11. வெளிநாடு செல்வதற்கான சம்பளமற்ற லீவு Nopay Leave for Abroad

பாடசாலை தவணை விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் இலங்கைக்கு வெளியே சென்று வருவதற்கு மூன்று மாத காலத்துக்கு மேற்படாத சம்பளமற்ற லீவு ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். இதற்குரிய விண்ணப்பங்கள் படிவம் பொது 120 ல் மூன்று மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அதிபர், கொத்தணி அதிபர், கோட்டக் கல்வி அதிகாரி, கல்விப்பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்விச் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். குறிப்பிட்ட லீவு முடிந்ததும் உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் தமது பாடசாலையில் மீண்டும் கடமை ஏற்று அதிபர் மூலம் கல்விப்பணிப்பாளருக்கும் செயலாளருக்கும் அறிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் மாகாணக் கல்விச் செயலாளரின் அனுமதியின்றி அவர் மீளவும் கடமை ஏற்க அனுமதிக்கப்படமாட்டார். அதிபர் இதுபற்றி கல்விப்பணிப்பாளருக்கு உடன் அறிவிக்க வேண்டும். சுகவீனம் காரணமாக உரிய திகதியில் பாடசாலையில் கடமை ஏற்க இயலாவிடின் அவர் தங்கியிருக்கும் இலங்கை உயர்ஸ்தானிகர் அல்லது தூதுவருக்கு அறிவித்து அவரால் நியமிக்கப்பட்ட மருத்துவரின் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அதற்கான மருத்துவச் சான்றிதழை பெற்று விடுதலையை நீடிக்க கோரும் விண்ணப்பத்துடன் அதனை இணைத்து கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தவறின் அவர் பதவியில் இருந்து தாமாகவே விலகிக் கொண்டதாக கருதி அதற்குரிய கடிதம் அவருக்கு அனுப்பப்படும்.

12. தொழில் சார்ந்தது அல்லது இலங்கையில் இல்லாத கற்கை நெறி Nopay Leve For Study And or Employment Abroad

இலங்கைக்கு வெளியே படிப்பை மேற் கொள்வதற்கோ அல்லது தொழில் பார்ப்பதற்கோ முதல் மூன்று ஆண்டுகளுக்குப் பின்ன அவசிய மேற்படில் அதனை நீடிப்பதற்கு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கும் மொத்தமாக ஒருவரின் உத்தியோக காலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு சம்பள மற்ற லீவு பெறுவதற்கு ஆசிரியர் விண்ணப்பிக்கலாம். இத்தகைய லீவு பெறுவதற்கான விண்ணப்பங்கள் உரிய

படிவங்களில் நிரப்பப்பட்டு படிப்பு லீவாயின் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் கல்வி நிறுவனம் அளித்த அனுமதிக் கடிதம் வேலை பார்ப்பதாயின் வேலைகொள்வோர் வழங்கிய வேலைக்கு அழைத்த அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றை இணைத்து அதிபர் கல்விப்பணிப் பாளர் ஆகியோர் மூலம் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்ப வேண்டும். படிப்புக்காக வழங்கப்படும் தொடர்ச்சியான காலப் பகுதி மூன்று ஆண்டுகள் மட்டுமே, தொழிற் பார்ப்பதற்கு மட்டும் தொடர்ச்சியான காலப் பகுதி ஐந்து ஆண்டுகள் வரைநீடிக்கப்படலாம்,

சம்பளமற்ற லீவில் படிப்பதற்கு அல்லது வெளியே தொழில் பார்ப் பதற்கு வெளிநாடு செல்வதற்கு முன் கடப்பாட்டுச் சேவை தொடர் பான முறி உடன்படிக்கை செய்ய வேண்டும்.

ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சியை மேற் கொள்ளும் காலத்துக்கு ஆசிரியர்களுக்குப் படிப்பு லீவு அனுமதிக்கப்படும். இது முழுச் சம்பளத்துடனானது. கல்வி நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் ஆசிரியர்க ளுக்கு அவ்வப் போது படிப்பு லீவு வழங்கப்படலாம். இது பற்றிய தீர்மானம் மத்திய, மாகாணக் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்படும். ஆசிரியர் படிப்புக்காக அல்லது பயிற்சிக்காகப் பெற்றுக் கொள்ளும் முழுச் சம்பளத்துடனான லீவு தொடர்பாகக் கடப்பாட்டுச் சேவைக் காலப் பகுதியொன்றில் சேவை புரிவதென ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். 1 மாதங்களுக்குக் குறைந்த காலப் பகுதியைக் கொண்ட லீவு தொடர்பாக கடப்பாட்டுச் சேவை செய்ய வேண்டிய தில்லை. 1 மாதங்கள் அல்லது அதறகுக் கூடிய காலப்பகுதி பற்றிய வரையில் ஆகக் கூடியது ஐந்து ஆண்டுகளுக்கு உட்பட்டதாக கடப் பாட்டுச் சேவைக் காலம், லீவுகாலத்தைப் போன்று இருமடங்குகளாக அமைதல் வேண்டும். இங்கு குறிப்பிட்ட கடப்பாட்டுச் சேவைக் காலங்க ஏலவே ஆசிரியர்கள் இணங்கியுள்ள முறிகளுக்கும் உடன்படிக்கை களுக்கும் பொருந்தும்.

இலங்கைக்குள்ளான சம்பள மற்ற லீவு தொடர்பான கட்டுப்பாட்டு சேவைசள் காலம் பின்வருமாறு அமையும்.

1) ஒரு மாதத்துக்குக் குறைந்த காலப் பகுதிக்கு கடப்பாட்டுச் சேவை கிடையாது.
2) ஒரு மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கான சம்பள மற்ற லீவு பற்றிய வகையில் கடப்பாட்டுச் சேவைக்காலம் சம்பளமறற லீவுக் காலத்தை இரண்டு மடங்காக ஒத்ததாக இருக்கும்.

லீவு வழங்கும் அதிகாரியால் வழங்கப்பட்ட லீவுகள் யாவற்றின தும் பதிவேடு ஒன்று படிவம் 190 இல் பேணப்படல் வேண்டும். ஆசி

ரியர்களின் சிற்றூழியர்களின் அமைய சுகவீன லீவுகள் யாவும் சம் பந்தப்பட்ட அதிபர்களே அனுமதிப்பர். அதிபர்களின் லீவுகள் ஆசிரியர் கள் மற்றும் சிற்றூழியர்களின் ஏனைய லீவுகள் தொடர்பான விண் ணப்பங்கள் அனைத்தும் அனுமதிக்காக மாவட்டக் கல்விப் பணிப்பாள ருக்கு அனுப்பப்படல் வேண்டும். சம்பளமற்ற லீவு எடுப்பவர்களின் விண்ணப்பங்களையும் பூர்த்தி செய்து பீ 100 படிவத்தையும் மருத்து வச் சான்றிதழ்களுடன் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும், படிப்பு லீவு, வெளிநாடு செல்வதற்கான லீவு என்பன கல்வி அமைச்சின் செயலாளராலேயே வழங்கப்படும். எதுவித அறிவித்த லின்றியும் உரிய முறையில் லீவுக்கு விண்ணப்பிக்காமலும், லீவில் வெளிநாடு சென்று மீண்டும் உரிய தினத்தில் கடமையை ஏற்காமலும் பாடசாலைக்கு சமுகமளிக்காத ஆசிரியர்கள் தாமாகவே சேவையை விட்டு விலகியவராகக் கருதப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எடுக் கப்படும்.

ஆசிரியர்கள் வேறொரு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல் லும் போது அவர்களின் லீவு விபரங்களைப் புதிய அதிபருக்குத் தாம தமின்றி அனுப்பி வைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் சம்பந் தப்பட்ட அதிபர்களுக்கு உண்டு.

ஆசிரியர்கள் கடமை புரியும் இடத்தை விட்டு செல்வதற்கான லீவைப் பெற்றுக்கொள்ளாது. நிலையத்தை விட்டு வெளியே செல்லக் கூடாது. விடுமுறை காலமாக இருப்பினும் எழுத்து மூலம் விண்ணப் பித்து அவ்வாறான லீவைப் பெற்றே வெளியிடங்களுக்கு செல்ல வேண்டும்.

( முழுச்சம்பளமுள்ள விசேட லீவு:-

ஒரு அரசாங்க நிரந்தர ஊழியர் தற்காலிக ஊழியர் / வருட சேவையை மாதந்த சம்பள அடிப்படையில் அல்லது நாளாந்த சம்பள அடிப்படையில் அல்லது இரண்டுமாக அமைய ............................

ஊழியர் (Casual Employee) / வருட தொடர்ச்சியான [சேவையை முடித்திருப்பின் இவர் கஜரோகம் .. ... தொழு ,நோய் ........... அல்லது புற்று நோய் ஆல் பாதிக்கப்பட்டு அவர் ஒரு வைத்திய குழு வினால் சுகமடைய நியாயமான காரணங்கள் இருப்பின் அவருக்கு முழுச் சம்பள லீவு கீழ் கண்டவாறு வழங்கலாம்.

1.1 கஜரோகம்:- Tubercu Losis

9 மாதங்கள் தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் இடை விட்டு விசேட முழுச் சம்பள லீவு வழங்கலாம். அதாவது 1 வது தடவையில்

9 மாதங்கள் வழங்கிய பின் அவ் ஊழியர் லீவுக்கு பின் 4 வருடங்களுக்கு கடமையாற்றிய பின் இரண்டாவது 9 மாதங்கள் வழங்கப்படும்

1.2 தொழுநோய்:- Leprosy

மொத்தமாக 22 மாதங்களுக்கு மேற்படாத விசேட முழுச் சம்பளம் லீவு வழங்கலாம்.

1.3 புற்றுநோய்:- Cancer

மொத்தமாக ஆறு மாதங்ளெுக்கு மேற்படாத விசேட முழுச் சம்பள லீவு வழங்கலாம்.

2. ............................................ லீவு:- Leave Exhausted

உபவிதி 2.1 2.5 விதிக்கப்பட்டவற்றை திருப்தி செய்யும் வகையிலும் சாதாரணமாக ஊழியர் உரிமையுள்ள முழுச் சம்பளமுள்ள லீவுகள் எல்லாவற்றையும் எடுத்துப் பின் விசேட முழுச் சம்பளமுள் லீவு வழங்கலாம்.

2.1 திணைக்கள தலைவர் ஊழியர் ஒருவர் கஜரோகம். தொழுநோய் அல்லது புற்றுநோய்யால் பாதிக்கப்பட்டுள்ளார் என முதலாவது வைத்திய சான்றிதழை சமர்ப்பித்தவுடன் அவ் ஊழியர் குணமடைய சந்தர்ப்பம் உண்டா இல்லையா என்பதை தீர்மானிக்க அவ் ஊழியரை வைத்திய சபைக்கு திணைக்கள தலைவர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

2.2 வைத்திய சபையினால் விதந்துரைக்கப்பட்ட சிகிச்சை முறையை அவ் ஊழியர் பெற வேண்டும்.

2.3 கஜரோகத்தை பொறுத்த வரையில் கூடிய விரைவாக சிகிச்சை பின்வரும் முறையில் தெரிவு அடிப்படையில் பெறல் வேண்டும்.

ஒரு ஆரோக்கியஸ்தானம் வியாதியைக் குணப்படுத்துதற்குக் உகந்த சிதோஸ்ணமுள்ள இடத்தில் அமைந்த வைத்தியசாலை, ஆரோக்கியாசிரமம் Sanatorium அல்லது உள்ளூர் ஆஸ்பத்திரியுடன் உள்ள கஜரோக வாட் அல்லது ஒரு உள்ளூர் வைத்தியசாலையில் வீட்டிலாயின் கஜரோக நிபுணரின் அப்படியில்லா விடத்து தகுதி வாய்ந்த வைத்திய அதிகாரியின் ஆலோசனையுடனும் வழி காட்டலுடன் சிகிச்சை பெறல் வேண்டும்.

2.4 விசேட முழுச்சம்பள வு லீவழங்கும் பொழுது அக்காலங்களுக்கு முறையான வைத்திய அத்தாட்சிப் பத்திரம் அல்லது வைத்திய குழுவின் அறிக்கை பெறப்படல் வேண்டும்.

2.5 உபவிதி: 2:1 அல்லது 2:3 படி வழங்கப்பட்ட விசேட லீவு முடிவடைவதற்கு சிறிது காலத்துக்கு முன் வைத்திய சபையிடமிருந்து அவ்வூழியர் சுகம் பெறவாய்ப்பு உண்டா இல்லையா தொடர்ந்து சேவையைச் செய்ய தகுதியுடனும் இருக்கின்றாரா என அறிக்கையைப் பெறல் வேண்டும்.

2.6 இப் பகுதியில் குறிப்பிடப்பட்ட முழுச் சம்பள லீவுகள் யாவும் முடிவடைந்த பின் சாதாரண லீவு சட்டங்களில் அரைச் சம்பள லீவு பெற அனுமதிக்கலாம். ஆசிரியர்களுக்கு பொருந்தாது.

2.7 முழுச்சம்பள அரைச்சம்பள லீவுகள் முடிவடைந்த பின் ஊழியர் சம்பளமற்ற லீவில் கணிக்கப்படும் இத்திட்டத்துக்கு வைத்திய சபையை Meadical Borad சம்பளமற்ற லீவு வழங்குவதற்கு நியாயம் உண்டா என ஒரு இறுதியுடன் தீர்ப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்ளல் வேண்டும். அதை நோக்கில் ஊழியரினதும் நிருவாகத்தினதும் நலன்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். அல்லது அவ் ஊழியர் வைத்திய காரணங்களுக்காக ஓய்வு பெறல் வேண்டும்.

3.1 குறித்த காலங்களில் பரிசோதனை

கஜரோகத்தின் காரணமாக லீவு பெற்று வேலைக்கு திரும்பிய பின் ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வைத்திய பரிசோதனைக்கு உள்ளாதல் வேண்டும். இதற்காக அண்மையில் உள்ள ஆரோக்கியசிரமம் அல்லது மார்பு சிகிச்சை நிலையத்துக்குச் சென்று ஒவ்வொரு பரிசோதனையின் போதும் வைத்திய அதிகாரியிடம் பூரண சுகம் Clear Certificate உள்ளதுடனான சான்றிதழ் பெறல் வேண்டும்.

3.1 தேவைப்படும் இடத்து குறித்த காலங்களில் பரிசோதனைக்கு செல்லும் போது கடமை லீவும் இலவச புகையிரத ஆணைச்சீட்டும் சிகிச்சை நிலையம் அல்லது ஆரோக்கியசிரமம் செல்வதற்கு அவ் ஊழியருக்கு வழங்கலாம். பிரயாணச் செலவு வழங்கப்படமாட்டாது.

4. உகந்த சூழலும் இலகுவான கடமையும் வைத்திய சபையில் ஒரு ஊழியர் தொற்று நோய் அற்றவர் எனவும் கடமைக்கு திரும்ப தகுதியுடையவர் எனவும் சில நிபந்தனை உடன் சிபார்சு செய்யின் அவர் அச் சிபார்சுகளுக்கு உரித்துடையார். உதாரணமாக இலகுவான வேலை அல்லது உகந்த தளலில் கடமையாற்றும் படி வைத்திய சபை சிபார்சு செய்யுமிடத்து அவ்வாறான கடமை அல்லது இடம் வழங்கப்படல் வேண்டும். அரசாங்க மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்குமிடத்து இச் சலுகை ஆஸ்மாவினால் பூடிக்கப்பட்ட ஒரு அரச ஊழியருக்கும் வழங்கலாம்.

. புனர் வாழ்வு:-

புனர் வாழ்வும் வைத்தியத்தின் ஓர் பகுதியாக இருப்பினும் ஊழியர் நோயாளியாக இருந்த படியாலும் வழமையான கடமைகளின் பெறுபேறுகளை எதிர்பார்க்கக் கூடாது. திணைக்களத் தலைவர் அவ் ஊழியரின் உத்தியோக வாழ்வை பொறுத்த வரையில் ஊழியரின் புனர் வாழ்வுக்கு உதவி செய்தல் வேண்டும்.

புகையிரத ஆணைப் பத்திரம்

புகையிரத ஆணைப் பத்திரம் பணப் பெறுமதியுடையது. நிதி சம்பந்தமானது. குறிப்பிடப்பட்ட சட்டங்களுக்கு அமைய அரசாங்க ஊழியரால் விரும்பும் பொழுது இந்தச் சலுகையானது அனுமதிக்கப்படும் விதிக்கப்பட்ட சட்டங்களை மீறி இச்சலுகையை அனுபவிக்க முயற்சித்தல் அரசாங்க நிதிப்பிரமாணங்களை புறக்கணித்த குற்றமாகும். அந்த அளவுக்குச் செய்யப்படும் நிலையில் ஒரு அரசாங்க ஊழியரை வேலைநீக்க தண்டனைக்கு ஆட்படுத்தவும் நேரிடும். இவ்வாறே புகையிரத ஆணைப்பத்திரம் வழங்கும் உத்தியோகத்தரையும் பாதிக்குமானால் ஒவ்வொரு சீட்டு வழங்கும் பொழுதும் அந்த உத்தியோகத்தர் அரசாங்க புகையிரத ஆணைப்பத்திரம் வழங்கல் சம்பந்தமாக ஆக்கப்பட்டுள்ள விதிகளைக் கருத்திற் கொண்டு நுணுகிய கவனத்தோடு வழங்கல் வேண்டும்,

1) ஒரு நிரந்தர உத்தியோகத்தர்கள் ரூ 7410ம் அதற்கு மேலும் 3 சோடி ஆணைச் சீட்டுக்களுக்கு உரித்துடையவராவர்.

2) ஒரு நிரந்தர உத்தியோகத்தர் ரூ 7410 க்கு கீழ் ஒரு சோடி ஆணைச் சீட்டுக்கு உரித்துடையராவர்.

3) ஒரு தற்காலிக ஊழியர் மாதாந்த சம்பள அடிப்படையில் வேலை செய்பவர். திருப்திகரமான ஒரு ஆண்டு சேவையை முடித்தவர். 1 சோடி ஆணைச் சீட்டுக்கு உரித்துடையவராவர்.

4) நாட் சம்பள ஊழியர் அல்லது அமய லீவுக்கு உரித்துடைய சமயோசித ஊழியர் ஒரு சோடி ஆணைச் சீட்டுக்கு உரித்துடையவராவர்.

ஒரு ஒய்வுதியம் பெறுபவர் திரும்பவும் அரச சேவையின் சேர்த்துக் கொள்ளப்படால் அவரும் குடும்பமும் 3 சோடி ஆணைச் சீட்டுக்களுக்கு உரித்துடையவர்கள் ஆவர்.

6) ஒரு ஓய்வூதியம் பெறுபவரும் அவரின் குடும்பமும் 2 சோடி ஆணைச் சீட்டுக்களுக்கு உரித்துடையவராவர். ஆணைச் சீட்டு வழங்க முன் அவை திகதியிடப்படல் வேண்டும். ஒவ்வொரு ஆணைச் சீட்டு வழங்கப்பட்ட நிதி ஆண்டில் பதியப்படல் வேண்டும். ஆணைச் சீட்டுக்கு உரித்துடையராவர் உதாரணமாக வருடத்தின் நடுப் பகுதியில் நியமனம் பெறும் ஒருவர் விகிதாசார அடிப்படையில் ஒருவர் 8 மாதத்துக்கு அல்லது அதற்குப் பின் நியமிக்கப்பட்டால் அவர் 1 ஆணைச் சீட்டுக்கு மாத்திரமே உரித்துடையவராவர் அதே போன்று 5 வது மாதத்துக்கு முன் ஒருவர் ஓய்வு பெறின் 1 சோடியும் 2 ம் மாதத்துக்கு முன ஓய்வு பெறின் 2 சோடியும் ஆணைச் சீட்டு வழங்கலாம். சேவையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்ட ஒருவர் திரும்பவும் பதவியில் அமர்த்தப்படும் வரை இடை நிறுத்தம் செய்யப்பட்ட காலப்பகுதிக்கு ஆணைச் சீட்டு வழங்கக் கூடாது.

பிரயாணம் செய்யும் வகுப்பு:- 1 ம் வகுப்பு ரூ 31,200/- மும் அதற்குமேலும் வருடம் தோறும்

சம்பள பெறுவர்:- 2ம் வகுப்பு ரூ 22,800/- மேலும்

குறையவும் சம்பளம் பெறுவர்:- 3ம் வகுப்பு ஏனையோர்.

ஒருவர் தனக்கு உரித்துடையதிலும் பார்க்க உயர்ந்த வகுப்பில் பிரயாணம் செய்ய விரும்பின் கட்டண வித்தியாசத்தை செலுத்தி புகையிரத சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். தனக்கு உரித்துடையதிலும் பார்க்க குறைந்ததிலும் பிராயணம் செய்ய ஆணைக் சீட்டை பெற்றுக் கொள்ளலாம்.

1 ம் வகுப்பில் பிரயாணம் செய்ய உரித்துடையவர்கள் உறங்கி செல்லும் உறங்கல் வசதிகளுக்கும் Sleeping Berth உரித்துடையவர்

1 ம் வகுப்பில் பிரயாணம் செய்ய உரித்துடையவர் Air Conditi oned Saloon or Observation Saloon குளிரூட்டப்பட்ட பெட்டியில் பிரயாணம் செய்ய உரித்துடையவர். உறங்கல் இருக்கை (Sleeping Cartickets) என ஆணைக் சீட்டில் குறிக்கப்பட்டதை நீக்கி ஆணைச் சீட்டில் வலது கை மூலையில் for Air Conoitioned Travel Or For ObServation Saloon Travel என எழுதப்படல் வேண்டும்.

நிரந்தர ஊழியரைப் போல் அவரின் குடும்பத்தினரும் புகையிரத ஆணைச் சீட்டுக்களுக்கு உரித்துடையவர்கள். ஆவர் "Family" "குடும்பம்" என்பது மனைவி பிள்ளைகள், தங்கியிருப்போரைக் குறிக்கும்.

திருமணம் ஆகாத / விதவை / தாரமிழந்தவருக்கு அவரின் உண்மையாகவே தங்கியிருக்கும் தகப்பன் / தாய் / சகோதரன் / சகோதரிக்கு ஆணைச் சீட்டுக்கள் வழங்கலாம்.

தங்கியிருப்போர் என்பது திணைக்கள தலைவரால் தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரர் பராமரிக்கும் பொறுப்பு தன்னைச் சார்ந்தது என்பதை திருப்திகரமாக நிருபிக்க வேண்டும்.

அசையும் அல்லது அசையா சொத்துடமை அதன் மூலம் பெறப்படும் வருமானம் அரச சேவையில் அல்லது வேறு தொழில் பார்த்து தங்கியிருப்போர் பராமரிக்கும் நிலையில் இருப்பன போன்றவை தங்கி வாழ்வோர் என்ற தகுதியை நிர்ணயிப்பதில் பாதிப்பை ஏற்படுத்தும்

தகப்பன் / தாய் அல்லது இருவரும் மாதம் 300/- அல்லது அதற்கு மேல் பெறியின் அல்லது சகோதர / சகோதரிகள் தொழில் பார்ப்பின் இச் சலுகை கிடையாது.

குடும்ப நிலமை வருடந்தோறும் திணைக்கள தலைவரால் அல்லது அவருக்காக ஒரு பொறுப்புள்ள அதிகாரியால் இச் சலுகை தொடர்ந்து வழங்கலாமா என்பது மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

சகோதரி என்பது தாரமிழந்த சகோதரிக்கு பொருந்தாது,

சிறிய தாய் சிறிய தகப்பன் பெறாப்பிள்ளை என்போர் ஊழியரின் தங்கியிராவிடின் விடுமுறை ஆணைச் சீட்டுக்கு தகுதியற்றவர்கள் வளர்ப்பு சட்ட பூர்வமானதாய் (Adoption is Bonafide) திணைக்கள தலைவர் திருப்தியின் வளர்ப்பு குழந்தைக்கு விடுமுறை ஆணைச் சீட்டு வழங்கலாம்.

அனுமதிக்கப்பட்ட லீவுடன் வெளிநாடு சென்ற உத்தியோகத்தரின் மனைவியும் குடும்பமும் இலங்கையில் இருப்பின் அவர்களுக்கு ஆணைச சீட்டுக்கு உரித்துடையவர். உத்தியோகத்தர்கள் இலங்கைக்கு வந்த பின் அவரும் ஆணைச் சீட்டுக்கு உரித்துடையவா. கணவனும் மனைவியும் தற்காலிக அல்லது நாளாந்த சம்பள அடிப்படையில் வேலை ஆற்றும் பொழுது இருவரும் ஆணைச் சீட்டுக்கு உரித்துடையவர்களாக இரும்பின் அவர்கள் இருவரினதும் பிரயாணம் செய்யும் வகுப்பு வேறுபட்டிருப்பினும் இருவரும் ஒன்றாக பிரயாணம் செய்யும் பொழுது உயர்ந்த வகுப்பைப் பெற உரித்துடையவர்கள். தனித்தனியாக பிரயாணம் செய்யும் பொழுது அவர்கள் தமக்கு உரிய வகுப்பில் தான் பிரயாணம் செய்ய வேண்டும். தற்காலிக அல்லது நாளாந்த அடிப்படையில் கருமமாற்றும் ஊழியர்களின் பிள்ளைகள் விடுமுறை ஆணைச் சீட்டுக்கு உரித்துடையவர்கள் அல்லர்.

பொது 21 படிவத்தில் திணைக்கள தலைவருக்கு விடுமுறை ஆணைச் சீட்டுச்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும். குடும்பத்தினருடனான் ஆணைச் சீட்டுக்கு விண்ணப்பம் செய்யும் பொழுது அவர்கள் சட்டப்படி உரித்துடையவர்கள் என்பதை நிரூபிப்பதற்காக ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.

கணவனும் மனைவியும் அரச ஊழியர்களாக இருப்பின் அவர்களுக்கும அவர்களின் பிள்ளைகளுக்குமான விண்ணப்பங்கள் கணவன் கடமையாற்றும் திணைக்கள தலைவர் மூலம் விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

3 வயதுக்கு கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கு ஆணைச் சீட்டு வழங்க தேவையில்லை 3 வயதுக்கு மேற்பட்டதும் 12 வயதுக்கு உட்பட்டதுமான குழந்தைக்கு அரை சீட்டுக்கான ஆணைப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும்.

அரசாங்க ஊழியர் ஒருவர் தனக்கும் மனைவிக்கும் தன்னிற் தங்கி வாழும் பிள்ளைகட்கும் ஆணைப்பத்திரம் பெறலாம்.

கணவன் கூட்டுத்தாபனத்திலோ, வர்த்தக ஸ்தாபனத்திலோ கடமை புரிவராயின் அவர் புகையிரத ஆணைப்பத்திரத்துக்கு உரித்தற்றவர். அவ்வாறான. நிலையில் மனைவி தனது அலுவலகத்தில் ஆணை பத்திரத்தைப் பெறலாம்.

விவாகமாகிப் பின் சட்டத்திற் கமைவாகப் பிரிந்து வாழ்பவர்கள் இருவரும் அரச ஊழியஞ் செய்பவராயின் தத்தம் உரிமைப்படி புகையிரத ஆணைச் சீட்டைப் பெறுவர். சட்டமூலம் நீதிஸ்தலத்தில் ஏற்றுக் கொண்டு பிரிந்து வாழ்பவர்களையே குறிக்கும். நீதிமன்றத்தில் பெறப்பட்ட தீர்ப்பின் பிரதி சமர்ப்பித்தல் அவசியம் இவர்களின் பிள்ளைகட்குரிய புகையிரத ஆணைச்சீட்டு குழந்தைகள் யாருடைய பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்களோ அவரால் அவருடைய திணைக்களத்தில் பெறப்படலாம்.

### 6. தொழிற்சங்கம்

வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குப் பங்குபெற உரிமையுடையோர்க்குக் கடமை காரணமான பிரயாண ஆணைச்சீட்டு வழங்கப்படலாம். ஒரு சில தொழிற்சங்கங்களின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மட்டுமே பங்குபற்றும் உரிமையுடையவராயிருப்பர். இதனைக் கருத்திற் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் பங்குபெற விரும்புவோரால் ஒப்ப

மிடப்பட்ட விண்ணப்பம் கல்விப்பணிப்பாளர், நிருவாகக் கிளைக்கு அனுப்பப்படுதல் வேண்டும். கல்வி அமைச்சரின் பணிப்பின் பிரகாரம் அவரைப் பேட்டிகாண விரும்புவர்கள் கொண்ட தூதுக் கோஷ்டி (குழு) அல்லது திணைக்கள அதிபர் அல்லது ஊழியருக்குக் கடமை காரண மாகச் செல்லும் புகையிரத ஆணைப்பத்திரம் வழங்கப்படலாம் இவ்வாறான சந்தர்ப்பத்தில் மந்திரி அவர்களிடமிருந்து பெற்ற அழைப்புக் கடிதப் பிரதி, ஊழியர் அங்கம் வகிக்கும் தொழிற் சங்கச் செயலாளரிடமிருந்து குறிப்பிட்ட ஊழியர் தொழிற் சங்கத்தில் அங்கம் வகிப்பதனையும், குழுவில் அங்கம் வகிப்பதனையும் உறுதிப்படுத்தி புகையிரத ஆணைப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் கடிதமும் விண்ணப் பத்துடன் பெற்று இணைக்கப்படல் வேண்டும் உத்தியோகத்தர் உரிமைப்படி 1 ஆம், 2 ஆம், 3 ஆம் வகுப்பிற்குரிய பிரயாணச் சீட்டுப் பெறலாம்.

போக திரும்ப வர தனித்தனியான ஆணைச் சீட்டுக்கள் தனித்தனி பிரயாணங்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

பிரயாணம் செய்யும் திகதி குறிப்பிடப்படல் வேண்டும், வழங்கப் படும் திகதிக்கும் பிரயாணம் செய்யும் திகதிக்கும் இடைப்பட்ட நாட்கள் 14 நாட்களுக்கு மேல் இருக்கக்கூடாது. உறங்கல் இருக்கை, குளிரூட் டப் பெட்டி போன்றவற்றில் பிரயாணம் செய்வதற்காக ஆசனம் ஒதுக் குதற்காக வழங்கப்படும் திகதியில் இருந்து 28 நாட்களுக்கு பிந்தாமல் பிரயாணம் செய்யும் திகதியை குறிப்பிடலாம்.

ஆணைச் சீட்டுக்குரியவர் தனக்குரிய ஆசனத்தை பதிவு செய்வ தற்காக ஆணைச் சீட்டில் பிரயாணம் செய்தல் புகையிரத சட்டங்க ளுக்கு அமைவாக அமைவுறும்

### பாவிக்கப்படாத ஆணைச் சீட்டுக்களும், ரிக்கற்றுக்களும்

பாவிக்கப்படாத ஆணைச்சீட்டுகள் வழங்கிய உத்தியோகத்தரிடம் செல்லுபடியாகும் கடைசித் தினத்துக்கு மூன்று நாட்களுக்குப் பிந்தா மல் திருப்பி ஒப்படைக்க வேண்டும்.

பாவிக்கப்படாத ரிக்கற் ஆணைச் சீட்டு வழங்கும் அதிகாரியிடம் வழங்கிய தினத்திலன்றே திருப்பி ஒப்படைக்கப்படல் வேண்டும்.

### ஆணைச் சீட்டுகளும் ரிக்கற்றுகளும் துஷ்பிரயோகம் செய்தல்

ஆணைச் சீட்டில் குறிக்கப்பட்டவரே ரிக்கற்றை பாவித்தல் வேண் டும். ஆணைச் சீட்டு அல்லது ரிக்கற் கைமாற்றுதல், செல்லுபடியற்ற

திகதிக்கு பின் பாவித்தால் பாவிப்பவர் தண்டனைக்கு உள்ளாதலோடு ஒழுங்கு நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.User Lirale to Prosecution and to Disciplinary Action தங்கியிருப்பவர் தவறு செய்யின் 3 சோடி ஆணைச் சீட்டுகளை இழப்பதுடன் துஷ்பிரயோகம் செய்த திகதியில் இருந்து 1 ஆண்டுக்கு ஆணைச் சீட்டு வழங்கப்படமாட்டாது. தங்கியிருப்பவர் ஒரு சோடி ஆணைச் சீட்டுக்கு உரித்துடையவர் ஆயின் அடுத்த ஆண்டுக்கு ஆணைச்சீட்டு வழங்கப்படமாட்டாது.

— உத்தியோகத்தர் வேலையை இழக்கும் அளவு தாக்கம் ஏற்படுத்தக்கூடியதாக துஷ்பிரயோகம் செய்யாவிடின் (வேறு தண்டனைகளுடன் அடுத்த மூன்று சோடி ஆணைச்சீட்டுக்களையும் இழப்பர். தவறு இழைத்த திகதியில் இருந்து ஓர் ஆண்டுக்கு சீட்டு வழங்கக்கூடாது. ஒரு சோடி ஆணைச்சீட்டுக்கு உரித்துடைய உத்தியோகத்தர் ஆயின் அடுத்த ஆண்டு ஆணைச்சீட்டு வழங்கப்படமாட்டாது.

திணைக்கள தலைவர் ஆணைச்சீட்டு சம்பந்தமான ஒரு முழுமையான பதிவேட்டை பேணல் வேண்டும்.

ஒரு ஊழியர் மாற்றப்பட்டால் பழைய திணைக்கள தலைவர் புதிய திணைக்கள தலைவருக்கு நடப்பாண்டில் ஊழியர் எடுத்த ஆணைச்சிட்டு சம்பந்தப்பட்ட விபரங்களை அறிவிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட விபரம் அனுப்பப்பட்ட திகதி கடிதம் சம்பந்தப்பட்ட மாற்றம் செய்யப்பட்ட திணைக்களத்தில் பேணப்படும் பதிவேட்டில் குறிக்கப்படல் வேண்டும். அறிவிக்கப்பட்ட விபரங்கள் மாற்றம் பெற்ற திணைக்களமும், உள்ள பதிவேட்டில் பதியப்பட வேண்டும்.

# Bibliography

1. Teachers Manual, Education Dept. Ceylon - 1957

2. Establishments Code of Sri Lanka - 1985

3. Establishments Code of Sri Lanka - 1989
Friedrich Ebert Stiftung

4. Circulars of Ministry of Education

5. Circulars of Ministry of Public Administration

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம். 254/1990